3. கவன ஈர்ப்பு.

(1) 10,000 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளுக்கு அதிக இடங்கள் ஒதுக்கி, ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்குக் கூடுதல் ஸ்தானங்கள் ஒதுக்காத நிலைமை குறித்து.

திரு. பி. திருஞானசம்பந்தம் : (திரு.வே. தங்கப்பாண்டியன் சார்பில்): தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"அண்மையில் மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் உத்தரவில், தனியார் பள்ளிகளுக்கு அதிகமான இடங்கள் ஒதுக்கியும் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்குக் கூடுதல் ஸ்தானங்கள் ஒதுக்காத நிலைமையையும் குறித்து."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பின்றி உள்ள ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 1973–74-ல் 10,200 ஆசிரியர் பதவிகளை புதிதாக தமிழ்நாடு அரசு 11—9—1973 அன்று ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் ஹையர் கிரேடு பதவிகள் 500, செகண்டரி கிரேடு பதவிகள் 6,000, உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 500, பி.டி. ஆசிரியர் பதவிகள் 1,200, கைத்தொழில் ஆசிரியர் பதவிகள் 2,000 ஆகும்.

இத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவோர் அனைவரும் முறையான ஆசிரியர் பதவிகளில் உள்ளோரையொப்ப சம்பளம், அகவிலைப்படி முதலியனவற்றைப் பெறுவர். இத் திட்டத்துக்கு 1973–74-ல் ஆகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 150 இலட்சமாகும். இத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவோர் அனைவரும் 1974–75-ம் கல்வி ஆண்டில் முறையான பதவிகளில் அமர்த்தப்படுவர்.

ஏற்கெனவே தொழில்பழகு ஆசிரியர் திட்டம் என ஒன்று 1970 அக்டோபர் முதல் தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்துள்ளது. அத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட சுமார் ஆறுயிரம் பேரில் சுமார் 1,800 பேர் தவிர மீதியுள்ளோர் அனைவரும் ஏற்கெனவே முறையான பதவிகளில் நியமிக்கப்பட்டு விட்டனர். அந்த 1,800 பேருக்கும் பயன் அளிப்பதற்காகவென்றே இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள 10,200 பதவிகளுள் 1,800 பதவிகள் ஒதுக்கப்பட்டு அந்த 1,800 தொழில் பழகு ஆசிரியர்களும் இனிமேல் முறையான ஆசிரியர்களை யொப்ப முழுச் சம்பளம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன 10,200 பதவிகளையும் பல்வேறு மாவட்டங்களிலுள்ள தலைமைக் கல்வி அலுவலர்களிடையே பள்ளிக் கல்வி இயக்குநர் பகிர்ந்து அளித்துள்ளார். அந்தந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறுவகை நிருவாகங்களின்

கீழ் (அரசு, தனியார், மற்றும் உள்ளாட்சி மன்ற நிருவாகங்களின் கீழ்) உள்ள பள்ளிகளுக்கு அப்பதவிகளைப் பகிர்ந்தளிக்கும் வேலையைத் தலைமைக் கல்வி அலுவலர்கள் செய்தனர். அவ்வாறு பகிர்ந்தளிக்கையில் அவர்கள் கருத்திற் கொண்டவை இரண்டு கோட்பாடுகளே. அவை (1) ஏற்கெனவே எப்பள்ளியிலாவது தொழில் பழகு ஆசிரியர் எவராவது இருப்பின் அவர்களுக்குப் பயன் அளிப்பதற்காகவென்று பதவிகள் ஒதுக்குதல்—மேலே விளக்கியவாறு : (2) அந்தந்த பள்ளிகளிலுள்ள ஆசிரிய மாணவர் விகிதப்படி எவற்றுக்குக் கூடுதல் ஆசிரியர் பதவிகள் மிகவும் தேவையோ அவற்றுக்குக் கூடுதல் பதவிகளை ஒதுக்குதல் ; ஆகிய இரண்டுமேயாகும். நிருவாகத்தை மனதிற் கொண்டு பதவிகளை ஒதுக்குதல் வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் செயல்படவில்லை. அவ்வாறு செயல்படுவது சரியுமாகாது. மேற்கண்ட கோட்பாடுகளின் அடிப்படையில் சில மாவட்டங்களில் தேவை காரணமாகத் தனியார் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பதவிகள் உள்ளாட்சி மன்றப் பதவிகளுக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளை விடக் கூடுதலாக இருந்திருக்கலாம்.

எந்த ஊராட்சி ஒன்றியமாவது தனக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளுக்கு நியமனம் செய்து முடித்துவிட்டு அதற்குப் பிறகு இன்னும் கூடுதல் பதவிகள் (ஐந்து லட்சம் பேருக்கு வேலைத் திட்டத்தின் கீழ்) வேண்டும் என்று விரும்பினுல் அந்தந்த மாவட்டத்திலுள்ள பள்ளிக் கல்வித்துறை அலுவலருக்கும், பள்ளிக் கல்வி இயக்குநருக்கும் தெரிவிக்கலாம். அவ்வாறு விரும்பும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரிய மாணவர் விகிதம் இடம் தருமேயானுல், அந்தந்த மாவட்டத்தில் பிற நிருவாகங்களிலாவது, அல்லது வேறு மாவட்டங்களிலாவது மேற்படி திட்டப் பதவிகள் மிஞ்சுமாயின் அவ்வாறு மிஞ்சும் பதவிகளைத் தர, பள்ளிக் கல்வித் துறை முயலும்.

(2) அரை மில்லியன் திட்டத்தில் சுமார் 200 பி.டி. ஆசிரியர்களை நியமிக்காதது குறித்து.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் :

" அரை மில்லியன் திட்டத்தில், 1,200 பி.டி. ஆசிரியர்களை நியமித்துக் கொள்வதில், அரசினர் " பி " பிரிவு பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும், இடைநிலைத் தரத்தில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்களுக்கு, முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருந்தும், அந்த பி.டி. ஆசிரியர்களை (சுமார் 200 பேர் கொண்டோரை) இதுவரையில் ஈர்த்துக் கொள்ளாதது குறித்து."